ஒருவருக்கு மூடநம்பிக்கையாக இருக்கலாம்; ஒருவருக்கு மதநம்பிக்கையாக இருக்கலாம்!

# நம் கொள்கையை நாம் பின்பற்றலாம்; அதில் தவறில்லை!

## சட்டப்பேரவையில் டாக்டர் நா.எழிலன் கேள்விக்கு - அமைச்சர் எஸ்.ரகுபதி பதில்!

**சென்னை, ஏப்.23-**

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது ஆயிரம் விளக்குத் தொகுதி உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் கேட்ட கேள்வியும் அதற்கு அமைச்சர் எஸ். ரகுபதி அளித்த பதிலும் வருமாறு:**

**டாக்டர் நா. எழிலன்:** *Section 51 (h) of the Indian Constitution states that, it is the duty of every citizen of India to develop scientific temper, humanism and the spirit of inquiry and reform.* அதாவது, அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில், அது அடிப்படைக் கடமை. அந்த அடிப்படைக் கடமைகளை நிறைவேற்றிட, நம் திராவிட மாடல் அரசு, மூட நம்பிக்கையை ஒழிப்பதற்காக, ஒரு தனி சிறப்புச் சட்டம் கொண்டுவருமா?



**அமைச்சர் எஸ். ரகுபதி:** மக்களின் நம்பிக்கை ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட நம்பிக்கை இருக்கும். ஒருவருக்கு மூட நம்பிக்கையாக இருக்கலாம், ஒருவருக்கு மத நம்பிக்கையாக இருக்கலாம். எனவே, அரசியல் சட்டப்படி அவரவர் உரிமைகளின் அடிப்படையில்தான், அவை பாதுகாக்க முடியுமேயொழிய, எந்த சட்டத்தின் மூலமாகவும், எதையும் நாம் கொண்டுவந்து, ஒன்றைத் தடுப்பதோ அல்லது ஒன்றைப் பாதுகாப்பதோ இயலாத காரியமாகப் போய்விடும்.

நம்முடைய கொள்கைகளை நாம் பின்பற்றலாம், அதில் ஒரு தவறும் கிடையாது. அதை மற்றவர்களிடத்தில் கட்டாயப்படுத்துகின்ற முயற்சி, ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இருக்குமா என்பதை ஆராய்ந்துதான் தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி பதிலளித்தார்.

மக்கள் நல்வாழ்வுத்துறை - வேளாண்துறை நடவடிக்கைக்குப் பிறகு

# மக்கள் தர்பூசணியை வாங்கிச் சாப்பிடுகிறார்கள்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தகவல்!

**சென்னை, ஏப். 23-**

**சட்டப்பேரவையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையின் போது அ.தி.மு.க. உறுப்பினர் ஆ. கோவிந்தசாமி பேசும்போது தர்பூசணி பற்றி பேசினார்.**

**இதற்கு பதிலளித்து வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் பேசியதாவது:-**

உறுப்பினர் ஆ. கோவிந்தசாமி அவர்கள் தவறாக எப்பொழுது பார்த்தாலும் தவறாகத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார். அவருடைய பேச்சு அவர் *speaker* நன்றாக *speaker* வேகமாக பேசுவதாலே அவர் தவறான செய்திகளை தெரிவிக்கிறார்.



தர்பூசணியை பொறுத்த வரை நல்ல ஆரம்ப கட்டத்தில் விவசாயிகள் ஒரு அச்சம் அடைந்தார்கள். ஆனால், அதற்குப்பிறகு அரசு மக்கள் நல்வாழ்வுத் துறை நடவடிக்கை எடுத்தபிறகு, அதை மக்கள் அதேபோல, தோட்டக்கலை எங்களுடைய வேளாண் துறையின் சார்பாக தோட்டக்கலைத் துறையின் அதிகாரிகள் அனைத்து விவசாய இந்த தர்பூசணி பயிர் செய்த அனைத்து இடங்களுக்கும் சென்று அவர்கள் அதை அறிந்து *YouTube* மூலமாகவும் செய்தி மூலமாகவும் விளம்பரங்கள் செய்யப்பட்டு, ஒரு நம்பிக்கை இப்பொழுது மக்கள் மத்தியில் ஏற்பட்டு, நான்கூட நேற்று தர்பூசணி வாங்கி சாப்பிட்டேன்.

விலையும்கூட இருக்கிறது. அதாவது உறுப்பினர் ஆ. கோவிந்தசாமி கடையில் காசு கொடுத்து சென்று இப்பொழுது வாங்கி சாப்பிட்டுப் பார்த்தால்தான் எவ்வளவு விலை என்று தெரியும் அவர்களுக்கு. விவசாயம் நொடிந்துவிட்டது என்ற தவறான செய்தியினைச் சொல்லி, அதற்கு நஷ்ட ஈடு வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் *hero* ஆக வேண்டுமென்று பார்க்கிறார். ஆனால் இந்த விஷயத்தில் உறுப்பினர் அவர்கள் *zero* தான்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் பதிலளித்தார்.

மாணவர்கள் விளையாடும் போது ஏற்படும் விபத்துகளைத் தடுக்க

# பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் அமைப்பதில் முன்னுரிமை அளிக்கப்படும்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தகவல்!

சென்னை, ஏப்.23-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது பள்ளியில் படிக்கும் மாணவர்கள் விளையாட்டுத் தனமாக விளையாட்டாக செய்யும்போது ஏற்படும் விபத்துக் களைத் தடுக்க பள்ளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் சுற்றுச்சுவர் அமைக்கப்படும் என்று அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டார்.



இதுகுறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஒன்றியம், தாகம்தீர்த்தா புரம் மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு மையம் அமைக்க அரசு முன் வருமா? என்று உறுப்பினர் மா.செந்தில்குமார் கேட்ட கேள்வியைத் தொடர்ந்து அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அளித்த பதில்கள் வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய உயிர் நண்பரும், திருச்சி மாவட்டத்தைச் சார்ந்தவர் என்கின்ற முறையில், வெறும் நடிகர் திலகத்திற்காக மட்டுமல்ல, நாட்டுப்பற்று மிக்கவராகவும், கனடா நாட்டில் கௌரவ மேயர் பொறுப்பை வகித்தவரும், ஒட்டுமொத்த தமிழகத்திற்கே பெருமைத் தேடித் தந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஐயா அவர்களுடைய சிலையை இருக்கின்ற இடத்திலேயே திறப்பதற்கு சட்டரீதியாக முயற்சி மேற்கொள்வேன் என்று சொன்ன தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி ஒரு பூங்காவிற்கு அவருடைய பெயரையும், அந்தப் பூங்காவில் அவருடைய சிலை அமைக்கப்படும் என்கிற முயற்சியை எடுப்பேன் என்ற சொன்ன எங்களுடைய நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நடிகர் திலகத்தினுடைய ரசிகன் என்கிற முறையிலும், உறவுக்காரன் என்கிற முறையிலும் முதலில் என்னுடைய நன்றிகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களை வணங்கி, தங்களுடைய அனுமதியோடு விடையை அளிக்கின்றேன். புதிய தேர்வு மையம் அமைக்க தேவையான நிபந்தனைகளை இப்பள்ளி தற்போது பூர்த்தி செய்யவில்லை.

மேலும், இப்பள்ளிக்கு அருகில் 8 கிலோ மீட்டர் தொலைவில் போதிய உட்கட்டமைப்பு வசதியுடன் கூடிய 3 தேர்வு மையங்கள் செயல்பட்டு வருவதால், இப்பள்ளிக்கு பொதுத் தேர்வு மையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

சட்டமன்ற உறுப்பினர், மாணவர்களின் நலன் சார்ந்து இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார். சில வழிமுறைகள் என்று பார்க்கும்போது, குறிப்பாக 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் 100 மாணவர்களாவது இருக்க வேண்டும். குறைந்தபட்சம் 10 கிலோ மீட்டர் சுற்றளவில் தேர்வு மையங்கள் இயங்கக் கூடாது. சார்ந்த அரசு மேல் நிலைப் பள்ளியின் அருகில் 8 கிலோ மீட்டர் தொலையில் போதிய உட்கட்டமைப்பு வசதிகளுடன் 3 தேர்வு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. குறிப்பாக, அந்தப் பள்ளியில் 54 *students* மட்டும்தான் இருக்கிறார்கள்.

இந்த ஆண்டு அதனை அதிகப்படுத்துவதற்கு துறை சார்பாக எங்களுடைய முயற்சியை கண்டிப்பாக நாங்கள் எடுப்போம். அப்படி முயற்சி எடுக்கின்றபோது, அது 100 ஆக வரும்போது, குறைந்தபட்சம் 100 மாணவர்கள் இருந்தார்களேயானால், புதிய தேர்வு மையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு செய்யப்படும்.

குறிப்பாக, தேர்வு மையம் அமைக்கப்படுகின்றபோது, இருக்கை வசதி எப்படியிருக்கிறது? கழிவறை வசதி எப்படியிருக்கிறது? இடவசதி எப்படி யிருக்கிறது என்பதை எங்களுடைய *DEOs. BEOs* மூலமாக கருத்துரு பெற்று நடவடிக்கை எடுக்கப்படும். கண்டிப்பாக இந்த ஆண்டு 100 மாணவர்களுக்கு மேல் எண்ணிக்கையை நாங்கள் அதிகப்படுத்து கின்றபோது, நீங்கள் சொன்ன இந்தத் தாகம்தீர்த்தா புரத்தின் தாகத்தை கண்டிப்பாக நாங்கள் தீர்ப்போம்.

சட்டமன்ற உறுப்பினருடைய உண்மையான அந்த *concern*. இளங்கன்று பயமறியாது என்பது போல சிலநேரங்களில் விளையாட்டுத்தனமாக இருக்கும் போது, விபத்திற்காக ஆகிவிடக்கூடாது என்கிற எண்ணத்தில் அவர் எடுத்ததை சொல்கிறார்.

நம்முடைய அமைச்சர் முத்துசாமி அவர்களுடைய மானியக் கோரிக்கையிலே பேசும்போது சொன்னார்கள். தனியார் பள்ளிகளில் சில *compound* சுவர் மிக குறைவாக, ஏரி பக்கத்தில் *compound* சுவர் மிக குறைவாக இருக்கும் போது மாணவச் செல்வங்கள் ஏதாவது வெளியில் சென்று விளையாடும்போது இந்த மாதிரி ஏதாவது விபத்துக்கு உள்ளாகிவிடுகிறது. *compound* சுவரை அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னால் அதுபோன்ற தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் கொடுக்கலாம் என்றுகூட அவர் சொல்லியிருக்கிறார்.

அது தனியார் பள்ளிகளுக்கு மட்டுமல்ல. அரசுப் பள்ளியை சார்ந்திருக்கிற நாங்களும் அதை கண்டிப்பாக, மிக *sensitive* ஆன விஷயம் அது. கண்டிப்பாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் சொன்னதுபோல அது மாதிரி இருக்கின்ற பள்ளிக்கூடங்கள் எதுஎதுவென்று நாங்கள் கண்டறிந்து ஏரிப்பக்கத்தில் இருந்தாலும் சரி அல்லது *railway track* பக்கத்தில் இருந்தாலும் சரி உடனடியாக நாங்கள் கவனத்தில் கொ ள்வோம். கட்டமைப்பு என்று வரும்போது நம்முடைய தொகுதியில் மட்டும் பார்த்தீர்களென்றால் கிட்டத்தட்ட 155 *classrooms, 13 labs and toilet units*, நான்கு, நான்கு *units* கட்டியிருக்கிறோம் நம்ம தொகுதியைப் பொறுத்தவரைக்கும்.

அதில் சுற்றுச்சுவர் என்று வரும்போது, இந்த ஆண்டு காலம் ஒதுக்கப்பட்டிருக்கிற 1,000 கோடி ரூபாயிலிருந்து *first preference* ஆக நாங்கள் உங்களுக்கு கொடுக்கிறோம். *'Prevention is better than cure'* மாதிரி ஒரு தவறு நடப்பதற்கு முன்பாக அதை தடுக்க வேண்டுமென்று வைத்திருக்கிறோம்.

கண்டிப்பாக இந்த ஆண்டே அதை செய்து தருவதற்கான எல்லா முயற்சியும் எற்படும் என்பதை சட்டமன்ற உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதிலளித்தார்.

உளுந்தூர்பேட்டை தொகுதி

# ஆசனூரில் - குறு, சிறு தொழில்களை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் விளக்கம்!

சென்னை, ஏப்.23-

சட்டப்பேரவையில் நேற்று, கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ஏ.ஜெ.மணிக்கண்ணன்:** உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆசனூர் பகுதியில் குறு, சிறு தொழிலை விரிவுபடுத்த அரசு முன்வருமா?



**அமைச்சர் தா.மோ. அன்பரசன்:** உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆசனூர் பகுதியில் உள்ள குறு, சிறு தொழில்களை விரிவுபடுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகிறது.

**ஏ.ஜெ.மணிக்கண்ணன்:** ஆசனூர் சிட்கோ தொழிற்பேட்டை பகுதி என்பது வளர்ந்து வரக்கூடிய ஒரு பகுதியாக உள்ளது. அந்தத் தொழிற்பேட்டையை விரிவாகக்கம் செய்ய, கூடுதலாக நிலம் எடுக்கப்பட்டு விரிவாக்கம் செய்யப்படுமா? அதேபோல, தற்போது ஆசனூரில் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய தொழிற்பேட்டையில் அடிப்படை வசதிகளான சாலை வசதிகள், மழைநீர் வெளியேறக் கூடிய கால்வாய்களையெல்லாம் சிறப்பாக அமைத்துத் தரப்படுமா?

**அமைச்சர் தா.மோ. அன்பரசன்:** கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் இரண்டு சிட்கோ தொழிற்பேட்டைகள் இயங்கி வருகின்றன. உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆசனூர் சிட்கோ தொழிற்பேட்டை 2009-ஆம் ஆண்டு 212.83 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டது. அதில் 158 தொழில் மனைகளில், 149 தொழில் மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதில் 93 தொழில் மனைகளில் 80 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. 56 தொழில் மனைகளில் தொழிற்சாலைகள் அமைக்கின்ற பணிகள் பல்வேறு கட்டங்களாக நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 9 தொழில் மனைகள் இதுவரை காலியாக இருக்கின்றன.

ஆசனூர் தொழிற்பேட்டையிலிருந்து 45 கி.மீ. தொலைவில், 2014ல் அமைக்கப்பட்ட காட்டுவன்னஞ்சூர் சிட்கோ தொழிற்பேட்டையில் முதற்கட்டமாக 15 ஏக்கர் பரப்பளவில் 50 தொழில் மனைகள் உருவாக்கப்பட்டு, 21 தொழில் மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மீதம் 29 தொழில் மனைகள் காலியாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் கோரியவாறு, ஆசனூர் தொழிற்பேட்டை விரிவாக்கம் செய்ய, அந்தத் தொழிற்பேட்டையை ஒட்டி அரசு புறம்போக்கு நிலம் எதுவும் இல்லாத காரணத்தினால், அந்தத் தொழிற்பேட்டையை விரிவாக்கம் செய்ய சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், 2024-2025 இந்த நிதி யாண்டில் மட்டும், ஆசனூர் தொழிற்பேட்டையில் ரூ.2 கோடியே 94 இலட்சம் மதிப்பீட்டில் சாலை வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்குகள் வசதி மற்றும் வடிகால் வசதி செய்யப்பட்டிருக்கிறது என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஏ.ஜெ.மணிக்கண்ணன்:** எனது உளுந்தூர்பேட்டை தொகுதியில், சேந்தநாடு பகுதியில் சுமார் 96 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் இருக்கிறது. அங்கு புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

**அமைச்சர் தா.மோ. அன்பரசன்:** சட்டமன்ற உறுப்பினர் தங்கள் தொகுதியிலே 90 ஏக்கருக்கு மேல் இடம் இருப்பதாக சொல்கிறார். நிச்சயமாக, அது குறித்து துறையின் சார்பில் ஆய்வு செய்து, ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலங்கள், அதாவது கனரக வாகனங்கள் செல்லக்கூடிய பாதைகள் இருக்கும் தருவாயில், நிச்சயமாக அங்கே சிட்கோ தொழிற்பேட்டை அமைத்துத் தரப்படும்.

அதுமட்டுமல்லாமல், 20 தொழில்முனைவோர்கள் ஒன்று சேர்ந்து, பத்து ஏக்கர் நிலத்தில் நாங்கள் தொழில் தொடங்கப்போகிறோம் என்று முன்வருவார்களேயானால், அவர்களுக்கு நம்முடைய அரசின் சார்பிலே சாலை வசதி, தெருவிளக்கு வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி போன்ற அடிப்படை பணிகள் 15 கோடி ரூபாய் மானியத்தில் அமைக்கப்பட்டு, அங்கு தொழிற்பேட்டை அமைத்து தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

க.கோவிந்தராஜ் தலைமை! மெட்டில்டா கோவிந்தராஜ் - சி.பி.திருமலை முன்னிலை!

# அண்ணாநகர் 101 வது வட்ட தி.மு.க. சார்பில் தண்ணீர் பந்தல்!

## நே.சிற்றரசு - எம்.கே.மோகன் - ச.பரமசிவம் - கார்த்திக் மோகன் திறந்து வைக்கின்றனர்!

சென்னை, ஏப். 23

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்டத்தில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ், தலைமையில் 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 (அ) வட்டக் கழகச் செயலாளர் சி.பி.திருமலை ஆகியோர் முன்னிலையில் தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தல் திறப்பு விழா இன்று (23.04.2025 புதன்கிழமை) 101 வது வட்டத்தில் நடைபெறுகிறது.

இதில் மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.கே.மோகன், அண்ணாநகர் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் ச. பரமசிவம், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், பி.எல்.ஏ 2 - நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.



திருவள்ளூர் மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, கும்முடிப்பூண்டி ஒன்றியம், மேல்முதலம்பேடு கீழ்காலனியை சேர்ந்த குட்டிமணி – உஷா என்பவரின் குடிசை வீடு மின்கசிவின் காரணமாக முற்றிலும் எரிந்து சாம்பலானது. தகவல் அறிந்த உடன் முன்னாள் மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் பாதிக்கப்பட்டோரை சந்தித்து ஆறுதல் கூறி நிவாரண பொருட்களையும், நிதியுதவியும் வழங்கினார். உடன் கே.ஜி.நமச்சிவாயம், கே.ஜி.குமார். எம்.கே.ஏ.யேசுரத்தினம், பா.சுரேஷ், கே.வி.ரவி. எம்.முனிவேல், வட்டாச்சியர் சுரேஷ்குமார், பிடிஒ.சந்திரசேகர், வனசந்திரன், ம. பார்த்திபன், சிவா, மாரிமுத்து, அன்பு, புதுபாளையம் தேவராஜ், பாபு மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளனர்.



எழும்பூர் தொகுதி, வார்டு எண்.108, சேத்துப்பட்டு, ஜெகந்நாதபுரம் இரண்டாவது தெருவில் புதிதாகக் கட்டப்பட்டுச் செயல்பட்டுவரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஆய்வு மேற்கொண்டார்.

சி.பி.திருமலை தலைமை! க.கோவிந்தராஜ் மெட்டில்டா கோவிந்தராஜ் முன்னிலை!

# அண்ணாநகர் 101 (அ) வட்ட தி.மு.க. சார்பில் தண்ணீர் பந்தல்!

## நே.சிற்றரசு - எம்.கே.மோகன் - ச.பரமசிவம் கார்த்திக் மோகன் திறந்து வைக்கின்றனர்!

சென்னை, ஏப். 23

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 (அ) வட்டத்தில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, 101 (அ) வட்டக் கழகச் செயலாளர் சி.பி.திருமலை தலைமையில் 101 வட்டக் கழகச் செயலாளர் க. கோவிந்தராஜ், 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலையில் தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தல் திறப்பு விழா இன்று (23.4.2025 புதன்கிழமை) 101 (அ) வட்டத்தில் நடைபெறுகிறது.

இதில் மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.கே. மோகன், அண்ணாநகர் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், பி.எல்.ஏ 2 - நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.



மதுரவாயல் 146 வது வட்டத்தில் வட்டச் செயலாளர் மதுரவாயல் எம்.ரூபன் ஏற்பாட்டில் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க. கணபதி எம்.எல்.ஏ. தண்ணீர் பந்தலை திறந்து வைத்தார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

சென்னை மேற்கு மாவட்ட

வர்த்தக அணி துணை அமைப்பாளர்

# எம்.ஜீவானந்தம் தாயார் வசந்தா அம்மாள் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஏப். 23

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. வர்த்தக அணி துணை அமைப்பாளர் எம். ஜீவானந்தம் அவர்களின் தாயார் வசந்தா அம்மாள் நேற்று (22.04.2025 செவ்வாய்க்கிழமை) காலை 08.30 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



அன்னாரின் மறைவு செய்தி அறிந்ததும், மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.விஜய ராஜ், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (23.04.2025 புதன்கிழமை) மதியம் 12 மணியளவில், கும்பகோணம், சுவாமி மலை வடக்கு வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து புறப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.